பதினைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி௵ (1889) ஆவணி௴ ௨௨ ஸ்தாபனம்.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆனி௴ ௨௦௨; (1924 ஜூலை 3) வியாழக்கிழமை. { இலக்கம்—௧.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், ஙியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

## "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள். (Standard Tiles)

பின்வரும் ஙியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சிதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருஙியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| ஷை சபாபருவவுரை | 2 | 25 |
| ஷை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| ஷை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| ஷை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| ஷை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொ[illegible]ன் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடுழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனுனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினல் V. P. தபால்சிலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

## பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினுல் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பளபளப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.

சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்கமெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிப்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முதிமொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6 திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆருதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கைவலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, குதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்,
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵ ஆனி௴ 20௳ வியாழக்கிழமை.

## இந்து சாதனம்.

நமது இந்து சாதனத்தின் ௩௫-ம் புத்தகம் சென்ற பிரசாரத்தோடு பூர்த்தியானது. இற்றைப் பிரசாரத் தொடக்கம் ௩௬-ம் புத்தகம் ஆரம்பமாகின்றது. இறைவனருளாலும் விஷயதானஞ் செய்யும் அறிஞர் உதவியினாலும் பத்திரிகாபிமானிகள் ஆதரவினாலும் சைவபரிபாலன சபையாரின் தாளாண்மையினாலும் பத்திரிகை அதிகாரிகளின் சிரமத்தினாலும் இப்பத்திரிகை சென்ற ௩௫ வருடகாலமாக யாதும் இடையூறின்றிக் காலந்தோறும் விருத்தியடைந்து வரலாயிற்று. சைவ சித்தாந்த சமயத்தை வளர்ப்பதும் புராதன ஆசாரங்களைப் பாதுகாப்பதும் செந்தமிழை விருத்திசெய்வதும் விவசாயம் கைத்தொழில் வாணிகம் என்னுமிவைகளை ஓங்கச்செய்வதும் சனங்களுக்கு அரசியல்ஞானத்தையூட்டிச் சுவதந்திரத்தின் பொருட்டு உழைப்பதும் இன்னபிறவுமே இப்பத்திரிகை செய்யவேண்டியதாய கைங்கரியங்களாம். மேலேசொல்லப்பட்ட விஷயங்களுக்கு விரோதமானவைகளைக் கண்டித்தலும் இதன் கடனாம்.

நமது இந்துசாதனம் இத்தொண்டுகளைப் பூரணமாகச் செய்யாவிட்டாலும் தன்னால் இயன்றளவிலே முகமன்பாராது செய்துவருகின்றதென்பதை அபிமானிகள் எவரும் அங்கீகரிப்பர். ஆனாற் காலபேதத்தினாற்போலும், இங்கே முந்திவந்துபுகுந்த கிறீஸ்துசமயத்தோடு அமையாது, சங்கரமதம் "தியாசபி" எனப்படும் ஒரு மதம் ஒருவகை வேதாந்தமதம் என்னும் இம்மதக் கொள்கைகளும், யாழ்ப்பாணத்துள்ள சில சைவசித்தாந்திகளிடத்து மெல்ல மெல்ல நுழையப் பார்க்கின்றன. இவற்றோடு அமையாது இங்குள்ள சைவசமயத்தவர்களின் ஆசாரத்திற்கு மாறான பலகொள்கைகளை நம்மனோர்க்கிடையே புகுத்துவதற்கு அந்நிய கொள்கையினர் சிலர் முயல்கின்றனர். இப்போபத்தை யுணர்ந்த இப்பத்திரிகை, இந்த விபரீதக் கொள்கைகள் இங்குள்ள சைவசித்தாந்த சமயத்தினருட் பிரவேசித்து அநர்த்தம் விளையாவண்ணம் கண்டிக்கப் புகுந்தபோது, அந்நிய கொள்கையுடையார் இதற்குப் பொறாமையும் அயோக்கியத்தனமுங் கற்பிக்க முயல்கின்றனர். இப்பத்திரிகை பொறாமை காரணமாக அயோக்கியத்தனமாக உழைப்பதோ இன்றேல் அநுதாபங் காரணமாக யோக்கியமாக உழைத்துவருவதோ என்பதை அறிவாலும் வயசாலும் அநுபவத்தாலும் மிக்க பெரியோர் இனிது அறிவர். சைவசித்தாந்தசமயத்திற்கும் புராதன பழக்கவழக்க ஒழுக்கங்களுக்கும் விரோதிகளாயுள்ளார் இதற்கு எத்துணை இடரை விளைக்க முயனுலும், இப்பத்திரிகை இறைவனருள்கொண்டும் அறிஞர் பெருந்துணைகொண்டும் அவற்றையெல்லாம் கடித்தொதுக்கிச் சற்சமயமாகிய சைவசமயத்தின்பொருட்டு உழைத்துவருமென்பது திண்ணம். ஆகையால் இவைகளைவிட்டும் இவர்களைவிட்டும் சைவாபிமானிகள் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை.

நிற்க, யாம் பத்திரிகாபிமானிகளுக்குக் கூறவேண்டியதொன்றுளது. பட்சத்திற்கொருமுறை ஒருபக்கத்தில் ஆங்கிலமும், ஒருபக்கத்தில் தமிழுமாக வெளிவந்த இப்பத்திரிகை காலகதியில் ஆங்கிலம் வேறாகவும் தமிழ் வேறாகவும் வெளிவந்தமையும், அதன் பின்னர் இரு பத்திரிகைகளும் வாரந்தோறும் வெளிவந்தமையும், இவற்றுள் ஆங்கிலம் சில வருடங்களாக வாரமிருமுறை வெளிவர, தமிழ்ப் பிரதி சென்றவருடந் தொடக்கமாக வாரமிருமுறை வெளிவருவதும் இங்ஙனம் வாரமிருமுறை வெளிவருவதனால் முன்னரினும் இருமடங்கு சிரமமும் பொருளும் இதற்கு ஆவசியகம் வேண்டுமென்பதும் அபிமானிகளெல்லாரும் அறிந்த விஷயம். ஆதலால் அபிமானிகளாயுள்ளார் தங்களால் வரவேண்டிய பத்திரக்கிரயத்தைக் காலதாமசமின்றிக் கொடுத்துதவி இதனை ஆதரித்தல்வேண்டும். மேலும், இப்பொழுது இருக்கும் சைவப்பிரகாச யந்திரசாலைக் கட்டிடம், இச்சைவப்பிரகாச யந்திரசாலையின் வருவாய்கொண்டே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டிடத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டது. இந்துக்கல்லூரிக்கு இடம் போதாமையினால், இவ்வியந்திரசாலைக் கட்டிடச் செலவை மேற்படி கல்லூரி அதிகாரிகள் சைவபரிபாலன சபையாருக்குக் கொடுத்துக் கட்டிடத்தைக் கல்லூரி உபயோகத்திற்கு விடுதல் வேண்டுமென்று கேட்டதற்குச் சபையார் உடன்பட்டு அப்பணத்தைப் பெற்று அதனோடு மேலதிகமான பணமுங் கொடுத்து, கல்லூரிக்குச் சமீபமாக ஒரு நிலத்தை வாங்கி அக்கட்டிடத்திற்கு ஒருசுபதினத்தில் அஸ்திபாரமும் இட்டிருக்கின்றனர். ஒரு சிறந்த யந்திரசாலை அமைத்தற்கான பணம் இப்பத்திரிகை வருவாயிலிருந்தும் அபிமானிகளின் திரவிய சகாயங்கொண்டுமே சேர்க்கவேண்டியிருக்கின்றது. இங்ஙனமெல்லாமிருப்பதால், பத்திரிகாபிமானிகளாயுள்ளாரனைவரும் தங்களால்வரவேண்டிய பத்திரக்கிரயத்தைக் கொடுப்பதோடமையாது, தாங்களும் மற்றுஞ் சைவாபிமானிகளும் தங்கள் தங்களால் இயன்ற திரவிய சகாயஞ்செய்து இந்த நிலைபெற்ற தருமஸ்தாபனத்தை நிறைவேற்றி இது முட்டின்றி இனிது நடைபெறச் செய்தல்வேண்டும்.

## நெற்செய்கை ஏன் விருத்தியாகவில்லை?

யாழ்ப்பாணத்திலே நீர்வளம் இல்லாமையினாலும் விஸ்தாரமாகப் போதிய நிலம் இல்லாமையினாலும் இங்குள்ள தனவந்தர்களாகிய கமக்காரர் பலர் பரந்தன் முரசுமோட்டை கிளிநொச்சி முதலான இடங்களில் "நெற்பயிர் விளை"விக்கும் பொருட்டுச் சில வருடங்களுக்குமுன் ஆரம்பித்தனர். "சீரைத் தேடின் ஏரைத் தேடு" எனவும், "பூமி திருத்தியுண்" எனவும் ஆன்றோர் கூறினமையினாலும் தாம் வருந்தித் தேடிய திரவியத்தை, தமக்கும் தமது தாய்நாட்டுக்கும் பயன்படுத்தும் வண்ணம் முயன்றனர். பல நிபந்தனைகளுடன் காடாய்க் கிடந்த நிலங்களை அரசினரிடம் பெற்றனர். பற்றைகளைப் பிடுங்கியும் மரங்களைத் தறித்தும் நிலத்தை மட்டப்படுத்தியும் வெகு கஷ்டத்துடன் கொஞ்சங் கொஞ்சமாகப் பயிர் செய்யத் தொடங்கினர். இக் கமக்காரர் ஆரம்பத்திற் பெருந்தொகைப் பணஞ் செலவிட்டனர். காட்டுக்காய்ச்சலுக்கு இரையாயினர். நுளம்புக் கடியினால் இடர்ப்பட்டனர். தண்ணீரில்லாமல் தவித்தனர். தாமும் கூலியாட்களும் தங்கியிருப்பதற்குத் தகுந்த தங்குமிடமின்மையினாற் சங்கடப்பட்டனர். துஷ்டமிருகங்களினாற் சேதமடைந்தனர். கட்டுக்குளத் தண்ணீர் இந்த முறைவரும் அடுத்தமுறை வரும் மற்றமுறைவரும் என்று எதிர்பார்த்திருந்து நம்பி மோசம் போயினர். சிலர் பணத்தையும் இழந்து சுகத்தையும் இழந்து, கமத்தையும் "பிச்சைவேண்டாமதாயே நாயைப்பிடி" என்றமுறையிற் கைவிட்டுத் திரும்பினர். இக்காரணங்களாலும் பிறவற்றாலும் நெற்செய்கை வடமாகாணத்தில் விருத்தியாகாதொழிந்தது.

நெற்செய்கை இங்கு விருத்தியாகாமைக்கு எம்மைப் பரிபாலிக்கும் அரசினரே உத்தரவாதியாவர். நாடு சீரும் சிறப்பும் அடைவதற்கும், வேளாண்மை செழிப்புற்றுக் குடிகள் குறைவின்றி வாழ்வதற்கும் அரசினர் முன்வந்து உதவிபுரிதல் வேண்டும். நல்லதண்ணீர் கொடுக்கவேண்டும். நோயாளரைப் பரிகரித்தற்பொருட்டு வைத்தியசாலையை ஸ்தாபிக்கவேண்டும். சனங்கள் நுளம்புக்கடியினாலும் துஷ்டமிருகங்களினாலும் வெய்யிலினாலும் மழையினாலும் வருந்தாதபிரகாரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவேண்டும்; அன்றேல் உதவியேனுஞ் செய்தல் வேண்டும். அரசினர் இத்தவிஷயத்திற் செலவுசெய்தபணத்தை வருஷந்தோறும் கமக்காரரிடமிருந்து சிறுச்சிறுத் தொகையாக அறவிட்டுக் கொள்ளக்கூடும். இவ்விதமாயின் சனங்களும் சிறிதுஞ் சிரமமின்றி அரசினர் செலவுசெய்துஉதவியதொகையைக் காலந்தோறும் மகிழ்ச்சியுடன் கொடுத்துவிடுவர். ஒரு பிள்ளையைக் கல்வி கற்பிப்பதும் அதன்பின் ஒருதொழிலில் அமர்த்திவைப்பதும் பிதாவின் கடமையாகும். அதுபோலவே குடிகளுக்குப் பெரும் பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடிய கல்வியை ஊட்டுவதும், அவைகள் முட்டின்றி வாழக்கூடியதொழின்முறைகளை வகுப்பதும் அரசினர் கடமையாகும்.

இங்கிலாந்திலே கமச்செய்கையை விருத்தியாக்குவதில் அரசினர் விசேட சிரத்தை செலுத்துகின்றனர். இருக்கத்தானும் இடமில்லாத வறியவர்களுக்கு வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டிக் கொடுக்கின்றனர். பின் காலந்தோறும் தாம் செலவுசெய்த பணத்தைச் சிறுச்சிறுத் தொகையாக அறவிடுகின்றனர். தொழிலில்லாதவர்களுக்குத் தொழில் செய்ய வழி காட்டுகின்றனர். பிழைக்க வழியில்லாதவர்களுக்குப் பிழைப்புக் காட்டுகின்றனர். அவர்களும் எங்கள் காருண்ணிய ஆங்கில அரசரின் பிரசைகளல்லவோ! நாமும் அந்த ஆங்கில அரசரின் பிரசைகளல்லவா? அங்கேன் அவ்விதம்? இங்கேன் இவ்விதம்? குடிகள் மனம் வருந்தாதபிரகாரம் அவர்களின் கொள்கைகளைத் தழுவி அரசுபுரியும் அரசன் இறைவனாக மதிக்கப்படுவன். குடிகள் அவ்வித அரசனை நீடூழி வாழவேண்டுமென வாழ்த்திப் போற்றும். இராச விசுவாசமுள்ள ஏழைக் குடிகள், இறுக்கச் சத்தியற்ற வரிகளை இறுத்து வயிறெரிய விடவொண்ணாது. எமது அரசினர் "நாம் முட்டின்றி உயிர்வாழும் பொருட்டு எமக்குக் கைத்தொழில் கற்பித்தனர்; பணவுதவி செய்தனர்; அந்த நன்றியை மறக்கவொண்ணாது! அரசினர் விதிக்கும் வரிகளை நாம் அன்புடன் இறுத்தல் வேண்டும்" என்ற முறையிற் குடிகளாகிய நாம் இருக்கத் தகுந்த மார்க்கத்தைத் தேடுதல் வேண்டும். கமச்செய்கைக்குத் தகுந்த இடங்களில் சனங்கள் சிரமமின்றிக் குடியேறக்கூடியமுறைகளை வகுத்தல் வேண்டும். பாழாய்க் கிடக்கும் நிலங்கள் பண்படுத்தப்பட்டுக் கமச்செய்கைக்குள்ளாக்கப்படுதல்வேண்டும். பிறதேசங்களுக்கு இங்கிருந்து அதிகமான நெல்லைக் கொடுத்துவந்த நாம் இப்பொழுது எமது தேவைக்குத்தானும் நெல்லின்றி அயல்நாடுகளை இரந்து கையேந்தி நிற்கவேண்டி வந்துவிட்டதே. இப் பெருங் குறை நீங்கவேண்டுமாயின் எம்மைப் பரிபாலிக்கும் அரசினர் நெற்செய்கையை விருத்தியாக்குதற்கேற்ற முறைகளையும் வழிகளையும் வகுத்து உதவிபுரிதல் வேண்டும்.

## உலகம் பலவிதம்.

சாதன நங்காய், உன்னை நீ யாரென அறிந்துகொள்ளுதல்வேண்டும். உன் கடமைகள் இன்னின்ன என்பதை நீ உணர்ந்துகொள்ளுதல்வேண்டும். அந்நிய சமயத்தவர்கள் தங்கள் சமயத்தை விருத்திசெய்யும் நோக்கமாகப் பத்திரிகைகள் வைத்து நடத்துவதைப் பார்த்து, முன்னிருந்த சைவாபிமானப் பிரபுக்கள் பலர் இற்றைக்கு 35 வருடங்கட்கு முன்னர் உன்னைத் தோற்றுவித்து உன் மூலமாக எங்கள் அரிய சைவசமயத்தை விருத்தி செய்தும் பாதுகாத்தும் வரலாயினர். அரசியல் விஷயமாயும் தமிழ்மக்கள் ஈடேற்றத்தின் பொருட்டும் பொதுவாக உழைத்துவந்தாலும் சைவமதத்தின்பொருட்டு உழைப்ப[illegible]பிரதான கடன் என்பது உலகப் பிரசித்தம். அந் நோக்கம் பற்றியே சைவநன்மக்கள் உன்னை ஆதரித்துப் போற்றிவருகின்றனர். சைவசமயக் கொள்கைகளுக்கு மாறானவை எவைகளோ, எங்கள் புராதன ஆசாரங்களுக்கு விரோதமானவைகளெவைகளோ அவைகளைச் சைவநன்மக்கள் அநுசரிக்காவண்ணம் தடுப்பதும் உன் கடன். சைவசமயத்திற்கு விரோதமான கொள்கைகள் சில இங்குள்ள சைவநன்மக்களுக்கிடையே கொடுவந்து புகுத்தப்படும்போது நீ அவற்றைக் கண்டித்து ஒதுக்கிவிடுதல்வேண்டும். அங்ஙனங் கண்டித் தொதுக்குங்காற் சிலர் உன்னைச் சீறி அதட்டி வெருட்ட முயல்வர். நங்காய், அவ்வெருட்டிற்குச் சிறிதும் அஞ்சாதே. கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் மாறின்றி உன் கருமத்தை இறுவரைகாறுஞ் செய்குதி. இப்படிச் செய்யும்போது இடையிடையே இடர்கள் நேர்தலும் இயல்பு. ஆனால் அவ்விடர்கட்கு இடங்கொடாதே. காய்த்த மரம் கல்லெறிப்படுதல் சகஜம். மேலும், செயற்கரிய செய்வர் பெரியர். நங்காய் உன்னை அபிமானித்து ஆதரிப்பார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொகையினர். ஆதலால் நீ அஞ்சவேண்டியதுமில்லை. அஞ்சவருவதுமில்லை. மெய்யைப் பொய் வெல்லாது.

* * *

ஒருவனுடைய கல்வி செல்வம் முதலியவற்றைக் கண்டு பிறருள்ளத்திற் பொறாமை உண்டாகுமேயன்றி, மௌட்டிகம் தரித்திரம் என்னும் இவை காரணமாகப் பொறாமை ஒருபோதும் எழுவதில்லை. ஒருவரிடத்துள்ள மௌட்டிகம் தரித்திரம் என்னுமிவற்றைக் கண்டு பெரியோர் வருந்துவது அநுதாபமெனப்படும். சாதியபிமானமிழந்து சமயாபிமானந் துறந்து பழைய கொள்கைகளை மறந்து நவீன முறைகளுட்புகுந்து கெட்டுப்போவாரைக் கண்ட பெரியோர் அங்ஙனங் கெட்டாரைக் கண்டித்து அவர்க்கு நற்புத்தி புகட்டத் துணியின் அது பொறாமையின் பாற்படாது. பிறர் கேடு கண்டு அவர் பொருட்டுப் "பரிவதூஉம் சான்றோர் கடன்" என்பர். "உன் மகன் பள்ளிக்கூடத்திற் கலகமிட்டான்" என்று அவன் தந்தையாகிய கொற்றனுக்கு அயலோர் கூற, "என் பிள்ளை கலகமிடமாட்டான். தங்கள் பிள்ளைகளைப்போல் அவனும் இங்கிலீசு படிக்கிறானே என்று பொறாமை கொண்டு இந்த அயலார் என்பிள்ளைமீது தோஷங் கற்பிக்கின்றார்க"ளெனக் கொற்றன் எண்ணுவது தவறாகும்.

* * *

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

கீழ்மக்கள் பெரியோரைப் பார்த்துத் தகாத வார்த்தைகளைச் சொல்லும்போது பெரியோராயுள்ளார் அவற்றைப் பொருட்படுத்தாது பொறுத்துக்கொள்ளவேண்டும். அங்ஙனம் பொறுத்தலின்றித் தாமும் எதிர்வார்த்தை பேசுவரேல் அது சேற்றிலே கல்லெறிதல் போலாகும். எதிர்வார்த்தை பேசுவோரை உலகம் பெரியோராக மதிக்கமாட்டாது. கீழ்மக்கள் தம்மை யிகழ்ந்தவிடத்தும் பெரியோர் மௌனஞ்சாதிப்பது அக்கீழ்மக்களுக்கு அஞ்சியன்று. "மாகாத்தயானை வழிவிலகல் புன்மலத்தின், சூகரத்திற் கஞ்சியோ சொல்" என்றாங்கு யானை பன்றியைக் கண்டு வழிவிலகிச் செல்லுதல் அப்பன்றிக்குப் பயந்தன்று. அதுபோலவே பெரியோரும் மரியாதையையிட்டே, கசடர் நேர்நின்று பேசும் இழிமொழிகளைப் பொறுப்பர். மேலும் அக் கசடரிடத்தில் நன்மொழியைக் காத்திருப்பது அத்திமரத்திற் பூக்கொய்ய எதிர்பார்த்திருத்தல்போல் வியர்த்தமாகும். "—ஒர்த்ததனை, உள்ளத்தானுள்ளி யுரைத்துராயூர்கேட்பத், துள்ளித் தூண் முட்டுமாங் கீழ்" என்றபிரகாரம் கீழ்மக்களாயுள்ளவர்கள் தம்மைப் பிறர் குறைகூறியவிடத்துத் துள்ளிப் பேசித் தூற்றித் திரிவர்.

* * *

"சென்ற வியாழக்கிழமை வெளிவந்த இந்துசாதனத்தில் உலகம் பலவிதம் என்னும் விஷயத்தில், தீண்டாமையையும் தமிழ்மகளிரையும் குறித்து எழுதியவிடத்துச் சிலவாக்கியங்கள் நமது சகோதரிகள் மனசை நோவச்செய்தவென அறிந்து பெரிதும் வருந்துகின்றேன். யான் முன்னர்ச் சொன்னபடி அவ்வாக்கியங்கள் அபிமானம்பற்றி யெழுந்தனவேயன்றி வேறு யாதுந் தீயநோக்கம்பற்றி யெழுதப்பட்டனவல்லவென்பதையும், அவற்றின்கண் புத்திபூர்வமாக யாதும் சிலேடைப்பிரயோகஞ் செய்யவில்லையென்பதையும், எனது சகோதரிகளைத் தூஷிப்பின் அத்தூஷணை அவர்பாலராளாகிய என்னையுஞ் சாருமென்பதையும் அவ்விஷயமாக எவ்வகையான விபரீதவிளக்கமுங் கொள்ளவொண்ணாதென்பதையும் எனது சகோதரிகளுக்கு மிக்க வினயத்துடன் தெரிவிக்கின்றேன்" என்று ஸ்ரீமதி ந. சிவகாமியம்மாள் கூறுகின்றனர்.

## சமாசாரம்.

**உபந்நியாசம்:**—சென்ற செவ்வாய்க்கிழமை இரவு திருநெல்வேலி தெற்கிலிருக்கும் வைரவர் கோவிலில் மகாதேவசுவாமிகளால் "பிறவிப் பயன்" என்னும் அரிய விஷயமாக ஓர் சிறந்த உபந்நியாசம் செய்யப் பெற்றது. சுவாமிகள் மேற்படி விஷயத்தைப் பலநூல்களிலுள்ள ஆதாரப் பிரமாணங்களுடன் கேட்போர் உள்ளத்தைக் கவரக்கூடிய விதமாக எடுத்து விளக்கிக்காட்டினர். ஆண்களும் பெண்களுமாகப் பலர் பத்தியுடன் கேட்டு ஆனந்தமடைந்தனர்,

**மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை:**— எமது சமயகுரவர் நால்வருள் ஒருவரும் "பத்திவலையிற்படுவோன்" எனச் சிவனுக்கோர் உண்மைத்திருநாமம் சூட்டியருளினவரும், கல்லாக்கருங்கன் மனமுடைக் கயவரையும் தன்வசப்படுத்தும் மகத்துவம் பொருந்திய திருவாசகத்தைத் திருவாய்மலர்ந்தருளியவருமாகிய திருவாதவூரரெனும் மாணிக்கவாசக சுவாமிகள் சாயுச்சியப் பெரும்பேறடைந்த புண்ணிய தினம் இந்த மீ 23௳ ஞாயிற்றுக்கிழமையாகும். இத்தினத்தில் மேற்படி சுவாமிகளின் குருபூசையை இனிது நடாத்தியும், அவரின் அற்புதசரித்திரத்தை வித்தியாசாலை திருக்கோயில் திருமடம் முதலான இடங்களிற் பிரசங்கம் செய்வித்தும் ஈடேறுதல் எமது கடனாகும்.

**காரைநகர்ச் சைவமகாசபை:**-இச்சபையாரின் ஆதரவின் கீழ் இந்த ஆனி மீ 15௳ (28-6-24) சனிக்கிழமை பிற்பகல் ஆறுமணியளவில் தங்கோடை நாகம்மாள் கோயில் மண்டபத்தில் சங்கானை நாகலிங்கசுவாமிகளால் "மாமிசவிலக்கு" என்னும் விஷயமாக ஓர்சிறந்த பிரசங்கஞ் செய்யப்பட்டது. பிரசாரகர் மானுடவாழ்க்கையின் அநித்தியத்தையும் மாமிசபோசனத்தினால் வரும்கொடிய பாவத்தையுங்குறித்து, பலதிருட்டாந்தங்களுடன் பிரசங்கஞ் செய்தனர். சங்கீதவித்துவான் பிரமஸ்ரீ. ச. பரமேஸ்வரஐயர் அவர்களது சங்கீதவாத்தியத்துடன் பிரசாரகர் இடைக்கிடையே தேவாரதிருவாசகங்கள் ஓதினர். ஸ்ரீ இ. தம்பையா அவர்கள் குறிப்புரை கூறினர். பிரசங்கத்தின் பெறுபேறாக அநேகர் மாமிசபோசனத்தை நிறுத்தி உண்மைச்சைவர்களாதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள்.

**தவறி விழுந்தும் தப்பிக் கொண்டது:—** சென்றவாரம் நீர்கொழும்பிலிருந்து புறப்பட்ட புகைரதத்திலிருந்து ஒரு சிறுகுழந்தை கீழே விழுந்துவிட்டது. அது அருந்தப்பாகச் சிறிது காயத்துடன் தப்பிக்கொண்டது.

**ஒரு குழந்தை எரிந்து இறந்துபோனது:—** சென்ற வெள்ளிக்கிழமை இரவு கட்டுக்காஸ் தோட்டையில் ஒரு மூன்றுவயதுக் குழந்தை சுண்ணாம்புச் சூளைக்குப் பக்கத்திற் சென்றபொழுது உடையில் நெருப்புப்பற்றி எரிந்து இறந்தது.

**மிருக நிஷ்டூர நிவிர்த்திச்சங்கப் பரிசோதகர் கொல்லப்பட்டார்:—** இச்சங்கப் பரிசோதகராகிய மிஸ்டர் விஜயசிங்கமென்பவர் பாணந்துறைக்குச் சமீபமாயுள்ள வலனௌன்னுமிடத்தில் சிலமாட்டுவண்டிகள் அளவுக்குமிஞ்சிய பாரத்துடன் வருவதைக்கண்டார். அவ்வண்டிக்காரரைத் தடுத்து நிற்கும்பொழுது அவர்கள் அப்பரிசோதகரைக் கல்லினாற் படுகாயப் படுத்திப் பூமியில் வீழ்த்தினர். பரிசோதகர் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப் பட்டு மறுநாள் உயிர் துறந்தனர்.

**புருஷன் வீட்டுக்குப்போக மறுத்த மனைவி கொலையுண்டாள்:—** குருநாக்கலைச் சேர்ந்த வீப்பதாளை என்னும் கிராமத்தில் வசிக்கும் பண்டா என்னும் ஒரு சிங்களவன் டிங்கிரிமெனிக்கா என்னும் ஒரு பெண்ணை விவாகம் செய்திருந்தான். சில மாதங்களின்பின் அப்பெண்ணைத் தன்னுடைய கிராமத்துக்கு வரும்படிகேட்க அவள் மறுத்து விட்டாள். பெண்ணின் சுற்றத்தாரும் அவளுக்குத் துணைச் செய்தமையினால் பண்டா என்பவன் அவளைக் கத்தியினாற் குற்றிக் கொன்றபின் ஓடிமறைந்தனன்.

**ஆங்கில அறிஞர் ஒருவர்:—** பூலோகத்து அறிஞர்களில் ஒருவராகக் கருதப்படும் பெர்னார்டு ஷா என்ற ஆங்கில அறிஞர் ஐரோப்பிய வழக்கப்படி புலாலுணவு கொள்வதில்லை. மதுபானம் செய்வதில்லை. புகைச்சுருட்டுப் பிடிப்பதுமில்லையாம்.

**அமரிக்காவும் ஜப்பானும் இந்தியாவும்:—** அமெரிக்காவில் ஜப்பானியர் குடியேறக் கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருப்பதால், ஜப்பானியர் கோபமடைந்து, இனி அமரிக்க சரக்குகளை வாங்கக்கூடாதென்றும் இந்தியப் பருத்திகளையே வாங்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். இந்தியர்கள் குடியேறுவதைத் தடுத்தும் அமரிக்கா அநியாயச் சட்டம் ஒன்று உண்டாக்கியிருக்கிறது.

**அமரிக்காவிற் சூறைக்காற்று:—** சென்றவாரம் அமரிக்காவில் உண்டான சூறைக்காற்றினால் ஒருநாடகசாலை சேதமுற்றது. நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் 165 பேர் கொல்லப்பட்டனர். லோறேயின் பட்டினத்தின் அழிவு 12,000,000 டலரென மதிப்பிடப்படுகிறது. 58 பேர் கொல்லப்பட்டனர். 118 பேர் காயப்பட்டனர். 7000 பேர் வீடுவாசலின்றித் தவிக்கின்றனர். இன்னும் பலபட்டினங்களிற் பெரும் சேதமும் சேமோசமும் நேர்ந்தன. சரியான விபரம் இன்னும் தெரியவில்லை.

**நாகரீகத்தைப்பற்றி மகாத்மாவின் அபிப்பிராயம்:—** "இக்கால நாகரீகத்தில் உலக இச்சையே குடிகொண்டிருக்கிறதென்பது என் அபிப்பிராயம். அதன் முடிவு பலவீனர்களைப் பலமுள்ளவர்கள் கொள்ளையிடுவதுதான். அமரிக்காவில் செல்வ நிலைமையே மற்றவர்களுக்கு ஒரு அளவுகோலாய் விட்டது. அமரிக்க ஐக்கிய மாகாணங்களைப் பற்றிப் பிறர் பொறாமைப் படவும் ஆய்விட்டது. ஒழுக்க வளர்ச்சி தடைப்பட்டுவிட்டது. முன்னேற்றமெல்லாம் ரூபாய், அணா, பைசாவில்தான வந்து விட்டன. எங்கள் நாடாகிய இத்தேசம் தேவர்கள் வசித்த நாடு என்று சொல்வார்கள் ஆனால் புகையும் யந்திர இரைச்சலும் நிரம்பியுள்ள கூட்டம் நிறைந்த தேசத்தில் தேவர்கள் வசித்து வருகிறார்களென்று சொல்லுவது பொருந்தாது" என்று மகாத்மாகாந்தி தம்மைக் கண்டு பேசிய ட்ரூபியர்சன் என்ற அமரிக்கரிடம் கூறினார். லோகோபகாரி.

**மேனாட்டுத் தேதிமுறையில் திருத்தயோசனை:—** வருகிற அக்டோபர் மாதத்தில் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜீனிவாவில் சர்வதேச சாஸ்திரிகளின் சபைகூடும். அப்போது மேனாட்டுத் தேதி முறைகளைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு ஒருயோசனை நடந்துவருகிறது. இப்போது ஆங்கில மாதத்தில் 28 முதல் 31 நாட்கள் வரையில் பலவிதமாக அடங்கியுள்ளன இதுபோலவே இன்னும் 12 விதமான வெவ்வேறு மாதக்கணக்குகள் மேனாடுகளில் அநுசரிக்கப்படுகின்றன. இப்போது நடைபெறும் யோசனையாவது இந்த 13 விதமான மாதக்கணக்குகளையும் ஒரேவிதமாய், அதாவது 28 நாட்களடங்கிய மாதங்களும் சாதாரண வருடத்தில் அதிகமாக ஒருநாளும் லீப்வருடத்தில் இரண்டுநாளும் ஒருவருடத்திற்கு அமைக்கப் பெறுமாம். இந்த ஆலோசனை சர்வதேச சாஸ்திரிகள் மகாசபையில் அங்கீகரிக்கப்படுமாயின் வருகிற 1928-ம் ஆண்டுமுதல் அநுசரணைக்கு வருமென்று சொல்லப்படுகின்றது. குமரன்.

### ஓர் அதிசயமான சம்பவம்.

குருநாக்கலைச் சார்ந்த ஒரு கிராமத்திலே, ஒருவனது குடிசையில் ஒரு ஆவேசம் மிகவும் ஆச்சரியமான சம்பவங்களை நிகழ்த்தி வருகின்றதாம். அக்குடிசையின் சொந்தக்காரனது மனைவி சிலகாலத்தின் முன் இறந்துவிட்டாள். இவள் இறக்குந்தருணத்திலே தனது புருஷனை வேறு மணம் முடியாதிருக்கும்வண்ணம் வேண்டிக்கொண்டாள். ஆனால் அவளது எண்ணத்துக்கு மாறாக அவன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டான். மணமுடித்தகாலத்திலே இறந்தவளின் ஆவேசம், தனது புருஷனின் புதுமனைவியைப் பெரிதும் பீடித்து வருத்தியது. இப்போது அது அங்கு பெரும் ஆச்சரியமான சம்பவங்களை விளைக்கத் தொடங்கிவிட்டது. ஏனைய பைசாசங்கள்போலல்லாது இது அங்கு செல்கின்றவர்களுடன் மிகவுந் தெளிவாகச் சம்பாஷிக்கின்றது. எவர்களுக்கும் அதன் தொனி மிகவும் நன்றாகக் கேட்கின்றது. நிலத்தின் கீழிருந்தோ அல்லது உயரமான இடத்திலிருந்தோ அது பேசுஞ் சத்தங் கேட்கின்றதென்பது சொல்ல முடியாது. எந்தப் பாஷையிலே பேசினாலும் அந்தப் பாஷையிலே அது பதிலளிக்கின்றது. சமஸ்கிருத பாஷையிலே பேசியவருக்கு சமஸ்கிருதத்திலேயே பதில் கிடைத்தது. குருநாக்கலிலும் பிற இடங்களிலுமிருந்து அநேக சனங்கள் சென்று வேடிக்கைபார்த்துவருகின்றனர். நகைகள் அடங்கிய இருப்புப் பெட்டியொன்றைக் களவுகொடுத்த ஒருவர் இந்தப் பைசாசத்தின் மூலமாக அதை எடுத்தவர்களையும், அப்பெட்டியையும் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகின்றது. —"தேசாபிமானி"

## கடிதம்.

### தாசியர் நடனம்.

சைவாபிமானிகளே!

இக்காலத்தில் எங்கள் சமயவழிபாடுகள் நடைபெறும் முறைகளைப் பார்த்தால் அவைகள் எவ்வளவோ அருவருக்கத்தக்கதாய் இருக்கின்றன. நமது சமயம் இப்படித் தளர்ந்தால் நமது நாடு ஈடேறுவதெப்படி? நமது சமயம் உன்னத நிலையை அடைவது எப்போ? கடவுளுடைய பரிசுத்தமான சந்நிதானத்தில் துன்மார்க்கம் பூண்ட தாசிகளை வருவித்து நடனஞ் செய்விப்பது எவ்வளவு பாதகமென்பதை எத்தனைபேர் உணர்ந்தீர்கள்? கடவுளுடைய சந்நிதியில் நாம் அவரைப் பயபத்தியுடன் தாழ்மையாய் வழிபடுவதற்குப் பதிலாகத் தாசிகளின் நடனத்தைப் பார்த்துக்கொண்டு உல்லாசமாயிருப்பது எவ்வளவு பாதகம்.

சில நாட்களுக்கு முன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சித்தங்கேணியிலுள்ள பிள்ளையார் கோவிலில் அவ்வூரைச் சேர்ந்தவர்களால் ஓர் மகா சங்காபிஷேகம் நடைபெற்றது. அன்று இரவு நடந்த அலங்காரத் திருவிழாவுக்கு நாலுகூட்டம் தாசியர் வந்தனர். இதற்கு எவ்வளவோ காசு செலவழித்தார்கள். இந்தப் பெருந்தொகையை வேறு நல்வழியில் செலவழிக்க இடமில்லையா? அடுத்தநாள் தானே அவ்வூர்ச்சைவாங்கிலவித்தியாசாலையில் நடந்த பரிசளிப்புக் கூட்டத்தில், வடமாகாணப் பள்ளிக்கூடங்களைப் பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர் அப்பள்ளிக்கூடக் கட்டடத்தை விரைவில் முடிக்கவேண்டுமென்று கூறினார் அதற்குப் போதிய பணமில்லையென்றுங் கூறினீர்களே! இத்தொகையை அநியாயமாய்ச் செலவழித்தது மாத்திரமன்று. தற்காலத்தில் இந்தத் தேசத்தில் உள்ள வாலிபர்கள் அன்னிய நாட்டு உடை உடுக்கிறதற்கு எவ்வளவு நியாயங்கள் பேசுகிறார்கள். ஆனால் இந்தத் திருவிழாவுக்கு வந்த 18 வயதுள்ள தாசி ஒருத்தி நடனத்துக்கு வரும்பொழுது அணிந்த உடை எவ்வளவு கேவலமென்றதை யார் உணர்ந்தார்களோ யானறியேன். இப்படியான உடையுடன் ஓர் பெண் நூற்றுக்கணக்கான ஆண்பிள்ளைகளிருக்கும் சபையின் நடுவில், அத்துடன் ஓர் சந்நிதானத்தில் வாள் விளையாட்டு விளையாடினால் எங்கள்சமயமும் நாடும் பண்டைக்காலத்தில் விளங்கிய உன்னத நிலைமையை இனி எப்போ அடைவது? இனி, பிரான்சுக்காரரைப் போலப் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து நடனஞ் செய்கிறதற்கு அநேகநாட் செல்லுமா?

இப்படியாக நடனம் நடக்கும்பொழுது எத்தனையோ முதிர்ந்த மனுஷர்களெல்லாம் தளம்பாமல் உல்லாசமாயிருந்து ஒரேபார்வையாய்க் கண் இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இருக்கும்பொழுது மணியடிக்கப்பட்டது. இந்த மணியடித்ததும் பலர் எழும்பினார்கள். இவர்கள் எழும்பவும் சில பெரியமனுஷர் இவர்களைப் பின்னரும் இருத்தி நடனஞ் செய்விக்க முயன்றார்கள். கடவுளுக்குச் செய்யும் பூசையிலும் பார்க்க இந்த நடனமே இவர்களுக்கு விசேஷமாயிருந்தது. இப்படிப் பெரியமனுஷர் செய்தால் எம்நாட்டு வாலிபர்மேல் குற்றஞ்சாட்டலாமா? இதற்குக் கோயில் முதலாளிமார்களும் திருவிழா உபயக்காரருந்தான் உத்தரவாதிகளென்று சொல்லவேண்டியது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயில் முதலிய பல கோயில்களில் தாசிகளின் நடனத்தை நிறுத்தினமை எல்லாருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால் மற்றைக் கோயில்களின் முதலாளிமார் பிருகத்தனமாக அதனைக் கைவிடாதிருப்பது பேரவமானத்தை விளைப்பதாகும்.

வாலிப சைவாபிமானிகளே!

நீங்கள்தான் இனிக்கோயில்களுக்கு முதலாளிமார்களாயும் இந்தத்தேசத்துக்குத் தலைவர்களாயும் வருகிறவர்கள். நீங்கள் இதையுணர்ந்து இதற்கு ஏற்ற முயற்சி செய்ய முன்வரவேண்டியது. இல்லாவிடில் நமது சைவசமயமும் தமிழ்ச் சாதியாரும் மிக்க கேவலமான நிலைக்கு வருதல் நிச்சயம். இதற்குச் செய்யவேண்டியது என்னவென்றால் ஒவ்வொரு இடத்திலும் கிழமைதோறும் கூட்டங்கள் நடைபெறச் செய்து இக் குற்றங்களைத் திருத்த முயலல் வேண்டும்.

வட்டுக்கோட்டை } 24—6—24. | இங்ஙனம், ஆ. சி. நடராசா.

### மதுபானஞ்செய்தல்.

இவ்வுலகின்கணுள்ள பல்லாயிரம் ஜனங்களிற் சிலரே படித்து அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவராகக் காணப்படுகின்றனர். அநேகமாய்ச் சிலர் படித்திருப்பினும் அவரவரது செய்கைகளாற் படித்த அறிவீனர்களாக மற்ற ஜனங்களாற் கருதப்படுகின்றனர். அவ்வாறவர்களைக் கருதுவதில் யாதொரு குற்றமுமில்லையென்பது நாம் சிறிது யோசித்தால் நன்கு விளங்கும். படித்தபின் பலனை அடையாமலிருப்பதால் அவர்களை யெவ்விதம் படித்தவராகக் கொள்ளக்கூடும்? இதினின்றும் படித்து அறிவொழுக்கங்களிற் சிறந்தவராய்க் காணப்படுபவரைத்தான நாம் படித்தவராகக் கொள்ளவேண்டுமென்பது பெறப்படுகின்றது. பலர் படித்த அறிவீனர்களா யிருக்கின்றனரென்றபொழுது, படித்ததின் பலனைத் தந்தம் அறிவொழுக்கங்களில் முறை தவறாமல் நிற்பவர் சிலர்தானென்பது உறுதிப்படுகின்றது. அவ்வாறு சிறந்துள்ளோர் சிலரேயாயினும் மற்றுள்ள பல ஜனங்களுள் குன்றின்மேலுள்ள தீபம்போற் சிறந்துவிளங்குகின்றனர். அப்படி விளங்குவதுமட்டும் பெரிதல்ல. நம் நல் நடக்கையின்படி மற்றக் கீழ்மக்களையும் சரிவர ஒழுகிவரச் செய்வதே முக்கியம். அவ்வாறு செய்தல் ஆரம்பத்தில் சிறிது கடினமாகத் தோன்றினும், உண்மையாகப் பாடுபட்டால், முடிவில் காரியசித்தி பெறாமல் போகாரென்பது நிச்சயம். மேலும் அவரவர் முயற்சிக்கேற்ற பெருமையும் பெறாமலொழியார்.

"முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்"

"முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்"

என்பவை பொய்யாகுமோ? இப்பெரு மொழிகளை மெய்ப்பிக்க நம்மேலோர் தம்மாலானமட்டும் முயற்சி செய்து நம் நாட்டில் வழங்கி வருந் தீயவொழுக்கங்களை நிவர்த்தி செய்து நம்மவர் திரும்புமவைகளைத் தம் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய தவசியம். இவ்வாறு செய்பவர்களைத் தேசாபிமானிகளில் முதன்மையராகக் கொள்ளுதல் நெறியே. நம் நாட்டில் தீயவொழுக்கங்கள் பல ஜனங்களாற் கொண்டாடப்பட்டு அவர்களுக்கு நாளாவர்த்தியில் சொல்லொணாத் துயரம் விளைவித்து வருகின்றன. அவ்வகைத் தீயவொழுக்கங்களிலொன்றாகிய மதுபானஞ் செய்தல் பலராலும் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. நம்மவரில் அநேகர் மதுபானஞ் செய்தலால் வருங் கேடுகளையறிந்தும் அத்தொழிலைக் கையாண்டு வருகின்றனர். மதுபானஞ் செய்வோர் தமது தொழிலால் தாம் யாதொரு பயனுமடையாமல் தம்மைச் சுற்றியுள்ளோர்க்கு அபக்கியாதியைத் தேடித் தருகின்றனரென்பதில் சிறிதும் ஐயமில்லை. மாந்தரிவ்வாறு கெடுவதற்கு யாது காரணம்? அவர்கள் செய்யும் தொழிலிவ்வகைப் பட்டதென் றறியார்களோ? சிலருக்குத் தெரியாதென்று கொண்டாலும் பலர் தெரிந்தே யநுஷ்டித்து வருவது விந்தையினும் விந்தையே. நம் நாட்டிற் கிதனினும் இழிதொழில் வேண்டுமோ? வேண்டாமென்பது வெளிப்படையாதலால் நம்மவரில் படித்தவர்கள் தம் மனதில் பொது நன்மையைக் கருதித் தம்மாலானமட்டும் இவ்வபக்கியாதியை நீக்கும்மாறு பாடு பட்டு,

"உடையரெனப் படுவதூக்கமஃதில்லா
ருடையதுடையரோமற்று"

எனும் திருவாக்குளதால் ஊக்கத்தை விடாமற் கைக்கொண்டு நம் கடைமக்களை ஈடேற்ற வேண்டுவதவசியம்.

நம்மவரின் வகைகள், மதுபானஞ் செய்வோர் எவ்வகையினைச் சார்ந்தோர்:—இனி வியாசத்தைக் கவனிப்போம். நம் தேச வாசிகள் பல வகுப்பினைச் சார்ந்தோராயினும் சிறிது ஆலோசிப்போமிரண்டு வகைகளையே அங்கீகரிப்பர். அவ்விரு வகுப்பினரும் மேன்மக்களெனவும், கீழ்மக்களெனவும் வழங்கப்படுவர். யாவரையும் அவரவர் செய்யும் தொழில்களாலிவ்விரண்டு வகுப்புகளி லொன்றைச் சார்ந்தவராகக் கொள்ளலாம். ஒருவன் செய்யும் தொழிலால்தான் அவனது குணத்தையும் ஸ்தாபிக்கலாகும். நிரம்பிய செல்வத்தராயினும் அவர்கள் தொழிலாற் கீழ்மக்களென்றும், மேன்மக்களென்றும் அறியலாகுமென்று நமது முன்னோர் கூறியுள்ளார்.

நல்ல குடியிற் பிறந்த தனவந்தராயிருப்பினும், அவர்கள் செய்யுந் தொழில் இழிதொழிலாயின் அவர்களை கீழோர்களாகக் கொள்வதில் யாதொரு குறையுமில்லை. அவ்வாறே இழிந்த குடியிற் பிறந்தோராயினும் நன்னடக்கையுடையவராகக் காணப்படின் அவர்களையே மேன்மக்களாகக் கொள்ளவேண்டும். மேலோர் இழிதொழில்செய்ய ஒருபொழுதுஞ் சம்மதியார். கீழோரா யாதொரு நாணமுமின்றி யெத்தொழிலும் செய்யச் சம்மதிப்பர். இக்கருத்து பலமுறையும் நம் பழையநூல்களிற் காண்கிறோம். உதாரணமாக,

"கள்ளார் கள்ளுண்ணார் கடிவகடிந் தொரீஇ,
வெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற் பொய்கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்."

என்று நாலடியார் கூறியிருப்பதால் முறையே மேலோர் எவ்வகையிலுங் குற்றமற்று வாழ விரும்புவரென்றும், கள்ளுண்ணல் முதலிய இழிதொழில் செய்யாரென்றும் பெறப்படுகின்றது. கள்ளுண்ணல் மேலோர்பாலில்லை யென்றதால் கீழோரே அத்தொழிலுக் குரியவரென்றாயிற்று. மேலோர் அத்தொழிலைக் கையாடாரென்பதால் இழிதொழிலென்ப துறுதிப்படுகின்றது. மேலும் மதுபானஞ்செய்த லிழிதொழிலல்லவென்று மறுப்பவர் யாருமிலர். இழிதொழிலானதால் அதனைக் கையாண்டுவருபவரை யிழிந்தோராகக் கொள்ளுவதில் யாதொரு குற்றமுமில்லையென்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

**மது பலவகைப்பட்டது:—** சாதாரணமாய் போதையினால் மயக்கத்தைத் தரும்படியானவையெல்லாம் மதுவாகவே பாவிக்கவேண்டும். இக்காரணத்தைக்கொண்டே கள், சாராயம், வைன், ரம், விஸ்கி, ஜின் முதலியவைகளை மதுவென்றவித் தலையின்கீழ் கொள்ளவேண்டும், எனவே எல்லா லாகிரி வஸ்துக்களையும் ஒருவகை மதுவாகக்கொண்டு கள் சாராயம் முதலியவைகளிடத்து யாது குற்றங் காண்கிறோமோ அக்குற்றத்தை இவைகள்பால் சாற்றவும்வேண்டும். இக்காரணத்தைக்கொண்டே இவ்வியாசத்தை கள்ளுண்ணுதலென்று கொள்ளாமல் மதுபானஞ் செய்தலென்று கொண்டது. ஆகையாலொருவன் மேற்கூறியவைகளில் யாதாயினு மொன்றை யுட்கொண்டாலு மருவருக்கத் தக்கதன்றோ? (வரும்)

—"கொங்குவேள்"

### அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6-ம் நம்பர்க்காசுக் கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்கம் இடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

1922-ம் ஹு

| நம். | மாச. | திக. | ரு. | ச. | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| f3314 | 7 | 2 | 30 | | தாலித்தட்டுக்கோர்வை 1 |
| 3328 | 7 | 3 | 7 | 4 | வெ. அரைஞாண் 1 |
| 3358 | 7 | 6 | 20 | | மு இ. பொன்பதக்கமும் ½ பவுண் 2, பின் 1, சிறுகூடு 2, மணி 2, கோர்த்த பாசி மணிக் கோர்வை 1 |
| 3384 | 7 | 8 | 20 | | பழையசறடு 1 டிம்பிசு. இ |
| 3446 | 7 | 14 | 15 | | பொன்காப்பு சோடி 1 பி. இ மணிக்கோர்வை 1-இல் மணி 33 |
| 3483 | 7 | 17 | 37 | | சிறு பூரானட்டியல் 1 சு. இ. |
| 3490 | 7 | 18 | 145 | | பவுண் 1 தூக்கியசங்கி. 1 பூரானட்டியல் 1 டிம்பி இல்லை பழைய கொலுசுசோடி 1 |
| 3531 | 7 | 20 | 30 | | பழுதானகல்லட்டியல் 1 சு. இ. |
| 3532 | 7 | 20 | 23 | | சறடு 1 |
| 3600 | 7 | 25 | 10 | | வெ. சறளை சோடி 1 |
| 3609 | 7 | 28 | 6 | | நசி. குழற்காப்புசோடி 1 |
| g212 | 8 | 22 | 25 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 255 | 8 | 26 | 47 | | பவுண் தகட்டுடன் கூடு 2 |
| 294 | 9 | 1 | 9 | | பி. இ. சிறுமணிக்கோர்வை 1, பொன்காதுப்பூ சோடி 1 |
| 304 | 9 | 2 | 10 | | சிறு கல்மோதிரம் 1, படம் 1, படக்கூர் 1 |
| 305 | 9 | 2 | 12 | | மணியட்டியல் 1 பழுது |
| 309 | 9 | 3 | 15 | | பூசாக்திரமுடன் மணி 11, சிறுசொப்புச்சிமிக்கி சோடி 1, பொன்காதுப்பு சோடி 1 |
| 389 | 9 | 11 | 6 | | சிமிக்கிசோடி 1 |
| 398 | 9 | 12 | 12 | | பூசாந்திரமுடன்மணி 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 399 | 9 | 12 | 12 | முதி பூசாந்திர முடன் மணி 4 |
| 401 | 9 | 12 | 18 | சிறுபாதசரம் சோடி 1 |
| 409 | 9 | 13 | 13 | சிறுபவுண் காப் சோ 1 |
| 414 | 9 | 14 | 23 | ஐந்துபட்டு 1முதிபூசாந்திரமுடன் மணி 4 |
| 430 | 9 | 15 | 35 4 | வெ. பாதசரம் சோடி 1 கொலிசுசோடி 1 |
| 489 | 9 | 21 | 40 4 | பொன்சிங்கமுகக் காப்பு சோடி 1 |
| 496 | 9 | 22 | 20 | சவுக்கமணிக் கோர்வை 1இல் மணி 27 |
| 503 | 9 | 24 | 40 | தாலிக்கொடி 1 |
| 539 | 9 | 28 | 30 | இரண்டுபட்டுசிறுமணி 1 பின் 1, சீனமணி 4, பி. இ. சிறு மணிக் கோர்வை1ல் மணி41 வளையல் 8 |
| 540 | 9 | 28 | 10 | பொன் மயிர்மாட்டி சோடி 1 |
| 544 | 9 | 28 | 6 | படக்கூர் 1, கொலிசு 1 |
| 655 | 10 | 11 | 14 | சிறுபொன்தோடுசோ.1 வெ. அரைஞாண் 2 |
| 665 | 10 | 11 | 8 | வளையற்றகடு 6 |
| 712 | 10 | 16 | 13 | வளையல் 8 |
| 739 | 10 | 18 | 10 | சிறுதோடு சோடி 1 சிறு கூடு 1 |
| 745 | 10 | 18 | 6 | வெ. குழற்காப்புசோ.1 |
| 770 | 10 | 21 | 35 | ஐந்துபட்டுமணிக் கோர்வை1, சிரகப்பூமணிக் கோர்வை 1 |
| 772 | 10 | 21 | 53 64 | சறடு 1, சவுக்கமணிக் கோர்வை 1 |
| 776 | 10 | 21 | 6 | சிறுதோடுசோடி 1 |
| 798 | 10 | 24 | 10 | சவுக்கமணிக்கோர்வை1 |
| 811 | 10 | 25 | 70 | பட்டணக்காப்பு சோ.1 |
| 853 | 10 | 30 | 7 | சிறுவளையல் 6 |
| 896 | 11 | 4 | 11 | ½பவுண் 1, அருங்கோல் சோடி1 |
| 915 | 11 | 7 | 25 | பவுண்காப்பு சோடி1 |
| 931 | 11 | 9 | 40 | பொன் நெற்றிவரி, உச்சிவரி, சந்திரப்பிறை ஆரியப்பிறை |
| 942 | 11 | 10 | 15 | சு. இ. சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 958 | 11 | 12 | 11 | சிறு பூசாந்திரமுடன் மணி 4 |
| 968 | 11 | 13 | 10 | முதி கூர்வாளிசோடி 1, சிறு அடுக்குக்காப்பு சோடி 1 |
| 976 | 11 | 14 | 32 4 | முதி பூசாந்திரமுடன் மணி12, வெ.கொண்டைக் கூர் 7 |
| 980 | 11 | 14 | 135 | மணிக் கோர்வை 1ல் மணி 31 |
| 993 | 11 | 15 | 40 | கற்தோடுசோடி 1 |
| 995 | 11 | 15 | 6 | வளையல் 4 |
| 1024 | 11 | 18 | 6 | கலாவரைமோதிரம் 1 |
| 1034 | 11 | 19 | 7 | வெ. சிறுகறணைசோடி1 |
| 1043 | 11 | 20 | 11 | இதழ் திருகுபூ 1 |
| 1045 | 11 | 20 | 15 | தோடு சோடி 1 |
| 1072 | 11 | 22 | 20 | மயிர்மாட்டி சோடி 1 படக்கூர் 1 |
| 1151 | 11 | 30 | 23 | பாம்புமோதிரம்1 குண்டு வைத்த ரூபா 15 |
| 1172 | 12 | 2 | 8 | வெ. அரைஞாண் 1 |
| 1183 | 12 | 3 | 13 | தங்க மோதிரம் 1 |
| 1185 | 12 | 3 | 8 | பி இ. சிறு மணிக்கோர்வை 1ல் மணி 30 |
| 1187 | 12 | 3 | 9 | பி. இ. சிறு மணிக்கோர்வை 1ல் மணி 25 |
| 1188 | 12 | 3 | 9 | மணியட்டியல் 1 |
| 1217 | 12 | 6 | 10 | வெ. தண்டை சோடி 1 |
| 1220 | 12 | 7 | 70 | சிறு பட்டணக்காப்பு சோடி 1 |
| 1240 | 12 | 8 | 6 | வளையல் 4 பழுது |
| 1280 | 12 | 13 | 12 | வெ. கொலுசு சோ. 1 |
| 1289 | 12 | 14 | 40 | பத.பொ.பூரானட்டிய.1 |
| 1296 | 12 | 14 | 18 | பொன் சம்புளுதவளையல் 1 பழுது |
| 1334 | 12 | 17 | 8 | சிறு மணிக்கோர்வை 1க்கு மணி 24 |
| 1335 | 12 | 17 | 7 | குண்டுவைத்த ½பவுண்1 |
| 1340 | 12 | 17 | 23 | இமிற் பதக்கம் 1 |
| 1350 | 12 | 17 | 15 | முதி பொன் சம்புளுத வளையல் 1 |
| 1356 | 12 | 18 | 33 | பொன் சறடு 1 வெ. குழற்காப்பு சோ. 1 |
| 1379 | 12 | 19 | 7 | ½பவுண் 1 |
| 1393 | 12 | 20 | 20 | மணியட்டியல் 1 |
| 1417 | 12 | 23 | 15 | மணிக்கோர்வை 1ல் மணி 36 |
| 1423 | 12 | 23 | 12 | சிறுபவுண்காப்பு சோ.1 |
| 1426 | 12 | 24 | 13 | வளையல் 8 |
| 1476 | 12 | 28 | 45 | பவுண் காப்பு சோடி 1 மணியட்டியல் 1 குழற் காப்பு சோடி 1 |
| 1511 | 12 | 30 | 8 | சவுக்கமணிக் கோர்வை 1ல் மணி 20 |
| 1515 | 12 | 31 | 10 | கற்காதப்பூ அலுக்கியா கூர் வாளி முறையே சோடி 1 |
| 1525 | 12 | 31 | 14 | தங்கப்பவுண் 1 |
| 1528 | 12 | 31 | 15 | கற்தோடு சோடி 1 |
| | 1923-ம் ஆண்டு | | | |
| 1540 | 1 | 1 | 7 | பொன் தோடு சோ. 1 |
| 1548 | 1 | 2 | 10 | பொன் தோடு சோ. 1 |
| 1586 | 1 | 3 | 14 | தங்கப்பவுண் 1 |
| 1614 | 1 | 5 | 100 04 | முதி பொன் கொடி 1 இமிற் தோடு சோ. 1 சவுக்கமணிக்கோர். 1 கண்டசரம் கோர். 1 பி. இ. வெ. பழைய பாதசரம் சோடி 1 |
| 1617 | 1 | 5 | 18 | சிறு பவுண் காப்பு 1 அலுக்கியா சோடி 1 தொங்கட்டான் 1, குழற்காப்பு சோ. 1 |
| 1641 | 1 | 6 | 10 | தோடு சோடி 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1687 | 1 | 8 | 7 | பி. இ. சிறுமணிக்கோர்வை 1ல் மணி 23 காதப்பூ சோ. 1 மயில் மூக்குத்தி 1 |
| 1691 | 1 | 8 | 28 | பொன் தாலிக்கொடி 1 |
| 1707 | 1 | 9 | 15 | பின் 1 |
| 1737 | 1 | 11 | 15 | சிறு பொன் சம்புநாத வளையல் 2 |
| 1754 | 1 | 11 | 7 | வெ. அடுக்குக் காப்பு சோடி 1 |
| 1755 | 1 | 11 | 9 | மேலீடு சோடி 1 |
| 1796 | 1 | 13 | 9 | பவுண் காப்பு 1 |
| 1815 | 1 | 13 | 32 | பத சறடு 1 |
| 1842 | 1 | 15 | 30 | பாதசரம் சோடி 1 |
| 1845 | 1 | 16 | 8 | சிறு பூசாந்திரமுடன் மணி |
| 1846 | 1 | 16 | 15 | சிறுபவுண் காப்பு சோ1 |
| 1860 | 1 | 16 | 45 | சிறு பூரானட்டியல் 1 டிம்பி இல்லை |
| 1863 | 1 | 17 | 25 04 | தங்க அரைஞாண் 1 |
| 1902 | 1 | 18 | 6 | சிறு கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 1936 | 1 | 19 | 8 | தங்க மோதிரம் 1 |
| 1949 | 1 | 21 | 8 | வளையல் 4 |
| 2049 | 1 | 27 | 6 | பி. இ. சிறு மணிக்கோர்வை 1ல் மணி 26 |
| 2068 | 1 | 28 | 15 | தாலித்தட்டு கோர்வை1 |
| 2096 | 1 | 30 | 17 | கற்தோடு சோடி 1 |
| 2116 | 2 | 1 | 40 | சிறு பூரானட்டியல் 1 |
| 2118 | 2 | 1 | 15 | பூசாந்திரம் பின் உடன் மணிக்கோர்வை 1ல் மணி 8 |
| 2174 | 2 | 5 | 30 | ½பவுண் 3உடன் சிறு மணிக்கோர்வை 1ல் மணி 37 |
| 2182 | 2 | 5 | 150 | பூரானட்டியல் 1 பழுதான கொன்றை மாலை 1 சுடாத்திருகுபூ1 |
| 2202 | 2 | 6 | 18 | கற்தோடு சோடி 1 |
| 2220 | 2 | 8 | 33 | பழைய 4பட்டு மணிக்கோர்வை 1 சிறு மணிக்கோர்வை1 பி.இ. |
| 2238 | 2 | 10 | 11 | சிறு பவுண் காப்பு 1 |
| 2264 | 2 | 12 | 6 | பொன் காப்பு 1 |
| 2273 | 2 | 13 | 20 | சு. இ. இமிற் கடுக்கன் சோ. 1 பொன் மோதிரம் 1 |
| 2298 | 2 | 15 | 60 | பழைய 5பட்டிலைமாலை1 |
| 2332 | 2 | 17 | 12 | சிறு சவுக்கமணிக்கோர்வை 1 |
| 2378 | 2 | 20 | 75 | பட்டணக்காப்பு சோ 1 |
| 2431 | 2 | 24 | 17 | சிறு பட்டணக்காப்பு 1 |
| 2452 | 2 | 27 | 150 | பூரானட்டியல் 1 பட்டணக்காப்பு சோடி 1 இமிற் பதக்கம் 1 |
| 2462 | 2 | 27 | 27 | தட்டுக்கிச்சி 1 வெ.தண்டை சோடி 1 |
| 2463 | 2 | 28 | 12 | குவளை சோடி 1 சு. இ. |
| 2478 | 3 | 1 | 80 | பொன் சிங்கமுகக் காப்பு சோடி 1 |
| 2521 | 3 | 6 | 6 | படக்கூர் 1 |
| 2592 | 3 | 14 | 12 | இமிற் பதக்கம் 1 |
| 2605 | 3 | 16 | 38 | குண்டுவைத்த ½பவுண்5 |
| 2622 | 3 | 19 | 25 | வெ. பாதசரம் சோ. 1 |
| 2647 | 3 | 23 | 36 | பழைய பி. இ. சிறு மணிக் கோர்வை 1, தண்டைசோடி1 அடுக்குக்காப்பு சோடி 2 |
| 2652 | 3 | 23 | 10 | வெ: ஒட்டியாணம் 1 |
| 2673 | 3 | 26 | 25 4 | பத.சவுக்கமணிக்கோ 1 |
| 2685 | 3 | 28 | 15 | பின்கோக்கி 1 |
| 2704 | 3 | 31 | 10 | தோடுசோடி1 கசி |

விற்பனவு:—இரத்தாக்ஷிஞு ஆடிமீ 4-ந்திகதிக்குச் சரியான 1924ஆ ஆடிமீ 19உ சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகீங்கலாக மிருதி டை கடையில் பிரசித்த ஏவத்திற் கூறி விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதஉடையார்,
வெந்தீஸ்மேஸ்தர்.

(Mis. 504)

---

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீழம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானறு.

தந்திவிலாசம்:—
ஶ்ரீபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

---

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அண்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

---


இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினல் தீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

(H. 27.)


---


உங்கள் குழந்தைகளுக்கு

## லக்ரொஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே
மூலப்பாலுக்குச் சமானமானது.

இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

## லக்ரொஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன்.
.H .O
(Q. 49.)

நேஸ்லின் & அங்கிலோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரொஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ..............................

விலாசம்:— ..............................


---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.